ஓம் அகத்தியர் துணை

## பிரம்மமுனி அருளிய

# கலிகால மாற்றங்கள்

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஓங்காரக்குடில்,
115, நகர் விரிவாக்கம், துறையூர் – 621 010.
☎: 04327–குருநாதர் : 455684, அலுவலகம் : 455184.
இரண்டாம் வெளியீடு : 01–11–2002

ஓம் ஸ்ரீ அகத்ீசர் துணை
அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!!
சத்தியமே அகத்தியம்!! அகத்தியமே ஜெயம்!!

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஓங்காரக்குடில்
115, நகர்விரிவாக்கம், துறையூர் – 621 010.
☎: 04327–குருநாதர் : 455684, அலுவலகம் : 455184.

அன்புடையீர், வணக்கம்,

27 ஆண்டுகளாக எங்கள் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் முதுபெரும் தலைவன் ஆசான் ஞானபண்டிதனான சுப்ரமணியர் அருளோடும், ஆசான் அகத்தீசன் ஆசியோடும் ஜாதி, மத, இன, மொழி, வேறுபாடின்றி சமநோக்கோடு பிரதிபலன் எதிர்பாராது **மக்கள் தொண்டே மகேசன் தொண்டு** என்று

நமது குருநாதர்,
கல்கி அவதாரமாகிய மோன நிலைகண்ட உலகப் பேராசான்,
கலியுக ஆன்மீக ஆசான், சிவராஜயோகி, ராஜரிஷி, பரமானந்த
சதாசிவ சற்குரு
தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**
அவர்கள் தலைமையில்

* 11–02–1988 முதல் இதுவரை ஓங்காரக்குடிலில் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் அன்னதானத்தில் சுமார் 2 கோடி மக்களுக்கு மேலாக பசியாற்றியுள்ளோம். மேலும் தினசரி ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் வழங்கிக்கொண்டிருக்கின்றோம்.
* 1989 ஆம் ஆண்டு சித்ராபௌர்ணமி முதல் இதுநாள்வரை 2714 ஏழை எளிய மக்களுக்கு இலவசத்திருமணம் செய்து வைத்துள்ளோம்.
* 1993 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் துறையூர் மற்றும் சுற்றுப்புற கிராம மக்களுக்கு தினசரி சுமார் 25 ஆயிரம் நபர்களுக்கு மேலாக எங்கள் சங்க இலவச குடிநீர் லாரி மற்றும் டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கி வருகிறோம்.
* 1996 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் ஓங்காரக்குடிலில் நடைபெறும் மாதாந்திர பௌர்ணமி பூஜையில் பெண்களுக்காக நடைபெறும் திருவிளக்கு பூஜையில் இதுநாள் வரையிலும் சுமார் 36701 பெண்கள் கலந்துகொண்டு ஞானியர்கள் அருளாசி பெற்றுள்ளார்கள். இதில் 1600 பேர் விதவை பெண்கள் ஆவார்கள். விதவை பெண்களின் திருவிளக்கு பூஜையை ஏற்று ஆசான் அகத்தீசன் அருள் செய்கிறார்.
* ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம், அன்னை சமூகசேவை நிறுவனம், ரோட்டரி சங்கம், ஜோசப் கண் மருத்துவமனை, திருச்சி மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கங்கள் இணைந்து 27–07–1997 முதல் ஓங்காரக்குடில் மகான் புஜண்ட மகரிஷி மண்டபத்தில் ஒவ்வொரு மாதம்தோறும் இரண்டாம் சனிக்கிழமைகளில் **இலவச கண்சிகிச்சை முகாம்** நடத்திவருகின்றோம். இம் முகாமில் பயனடைந்தவர்கள் விபரம் 5045 ஆண்கள், 5060 பெண்கள், 337 குழந்தைகள். இவர்களில் 2260 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்து லென்ஸ் பொருத்தப்பட்டது.
* **பெருமாள்மலை அடிவாரத்தில்** வீரப்ப முதலியார் அன்னதான சத்திரத்திலும், செட்டியார் மண்டபத்திலும் தினசரி காலையிலும், மதியமும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

* நகராட்சி நிர்வாகம் மற்றும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் நடத்தும் போலியோடு சொட்டு மருந்து முகாம் மற்றும் மஞ்சள் காமலை தடுப்பூசி முகாம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த இடவசதி செய்து கொடுத்து, இவர்களுக்குத் தேவையான இடவசதி, உணவு மற்றும் உதவிகளும் செய்து வருகிறோம்.
* 11 – 04 –1999 முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து மாலை 6 மணிக்கு கிராம மக்கள் உண்மை ஆன்மிகத்தை அறிந்துகொள்வதாக **ஆன்மிகச் சொற்பொழிவு மற்றும் வழிப்பாட்டினை** ஆசான் அகத்தீசன் நல்லாசியோடு செயல்படுத்தி வருகிறோம்.
* துறையூரைச் சார்ந்துள்ள கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு ஆசான் அகத்தீசனை பூஜைசெய்து அருள்பெற்ற பிரசாதம் இதுவரை பல லட்சம் மக்களுக்கு கொடுக்கப்பட்டது.
* கோடைக்காலங்களில் துறையூர் நகரத்தில் **கம்மங்கஞ்சி, நீர்மோர்** தினசரி ஆயிரக்கணக்கான மக்களுக்கு வழங்கிவந்துள்ளோம்.
* ஒவ்வொரு வியாழக்கிழமைதோறும் மாலை 6 மணிக்கு ஆசான் மாணிக்கவாசர் அருளிய திருமந்திர உபதேசம், இராமலிங்கசுாமிகள் அருளிய சுத்தசன்மார்க்க வேண்டுகோள், ஆசான் திருஞானசம்பந்தர் அருளிய கோளறு திருப்பதிகம், ஔவையார் அருளிய விநாயகர் அகவல் பாராயணம் நடைபெற்று வருகிறது.
* பூச நாளிலும், பௌர்ணமி நாளிலும் மாலை 6.00 மணிக்கு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்கசுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம் நடைபெற்று வருகிறது.
* பூச நன்னாளில் காலை 6.00 மணி முதல் 8.00 மணிவரையிலும், மாலை 6.00 மணி முதல் 8.00 மணிவரையிலும் அருட்பெருஞ்ஜோதி தரிசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

* மேலும், ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக சென்னை, சேலம், ராசிபுரம், கஞ்சமலைசித்தர் கோவில், திருச்சி, மங்காதேவன்பட்டி, தஞ்சை, பைங்காநாடு போன்ற ஊர்களிலும் அன்னதானம் நடைபெற்று வருகிறது.
* ஏழை எளிய மக்களுக்கு வேட்டி, சேலைகள் கொடுத்து வந்துள்ளோம்.
* ஏழை எளிய மாணவர்களுக்கு படிப்பிற்கு உதவி செய்து வந்துள்ளோம்.
* தினசரி காலை 6 மணிக்கு ஜோதி வழிபாடு நடைபெற்று வருகிறது.

## குருநாதர்

தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்களின் உபதேசம்

திருவடியே சிவமாவது தேரில்
திருவடியே சிவலோகம் சிந்திக்கில்
திருவடியே செல்கதியது செப்பில்
திருவடியே தஞ்சம் உள்தெளிவார்க்கே

திருமந்திரம் – உபதேசம் – கவி எண்:138

திருவடிஞானம் சிவமாக்குவிக்கும்
திருவடிஞானம் சிவலோகம்சேர்க்கும்
திருவடிஞானம் சிறைமலமீட்கும்
திருவடிஞானமே திண்சித்திமுத்தியே

திருமந்திரம் – திருவடிப்பேறு – கவி எண்:1598

## நவகோடி சித்தர்களுக்கு தலைவனாகிய

<u>ஆசான் அகத்தீசனை தியானித்தால் ஏற்படும் நன்மைகள்:</u>

ஓம் அகத்தீஸ்வரா! உன திருவடியை கோடானுகோடி ஆன்மீகவாதிகள் உருகி தியானம் செய்ததால் அவர்களுடைய முன்ஜென்மத்தில் செய்த வினைகளும்

இந்த ஜென்மத்தில் செய்த வினைகளும் நீங்கி நல்வினை, தீவினைப்பற்றி புரிந்து நல்வினையை பெருக்கியும், தீவினையை நீக்கியும் ஆசிபெற்றார்கள். நல்வினை, தீவினைப்பற்றி புரிந்துகொள்வதே பேரறிவாகும்.

நல்வினையை பெருக்கிக்கொண்ட மக்கள்தான் தூல உடம்பாகிய புறஉடம்பையும், சூட்சும தேகமாகிய அகஉடம்பையும் அறியமுடியும். புறஉடம்பாகிய தூலதேகத்தையும் அகவுடம்பாகிய சூட்சுமதேகத்தையும் அறிந்துகொள்ள உமது ஆசியின்றி முடியாது என்று அறிந்துகொள்ளவும் உமது ஆசிவேண்டும். உமது ஆசியின்றி எத்தனை சாஸ்திரங்கள், வேதங்கள், படித்தபோதிலும் அதனுடைய நுட்பம் (சூட்சுமம்) உணரமுடியாது என்பதை உமது திருவருள் கடாட்சத்தால் அறிந்துகொண்டேன்.

உன்திருவடியைப் பற்றி உருகி தியானிக்க நினைக்கிறேன். ஆனால் நான் செய்த பாவங்களோ என்னை தியானிக்க முடியாமல் தடை செய்கிறது. அந்த தடையை நீரே உடைத்து நாயினும் கடையேனாகிய என்னையும் ஒரு பொருட்டாக மதித்து என்னை ஏற்று அருள்செய்யும்படி உமது திருவடி பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

உருகி தியானிக்க நினைக்கிறேன், முன்செய்த பாவத்தால் கல்மனம் உருகவில்லை. கல்மனம் உருகி தியானிக்க ஆசிவேண்டும். உடனே கல்மனம் உருகாது என்பது உன் திருவருளால் அறிந்துகொண்டேன். உன்னை தியானிக்க தியானிக்கத்தான் கல் மனமாகிய என் மனம் உருகி தியானிக்க முடியும் என்பதையும் உமது திருவருளால் உணர்ந்துகொண்டேன்.

குறிப்பு 1 : நன்னெறியைக் கடைபிடிக்க வெண்டும் என்றால் தலைவன் ஆசான் அகத்தீசன் தான் என்று அறிந்து பூஜை செய்யவேண்டும். பூஜை செய்தால்தான் நன்னெறி எது, தீநெறி எது என்று உணரமுடியும். எனவே பூஜை செய்தால்தான் நன்னெறியைக் கடைபிடிக்கமுடியும்.

குறிப்பு 2 : ஆசான் அகத்தீசரை பூஜிக்க பூஜிக்க வினை நீங்கும். மேலும் மேலும் பூஜிக்க பூஜிக்க தன்னை பற்றி அறியக்கூடிய சிற்பறிவு உண்டாகும். மேலும் மேலும் உருகி தியானிக்க ஆன்மா மும்மலமாகிய சிறையில் அகப்பட்ட விபரம் தெரியும். மேலும் விடாது திருவடியை பற்றி உருகினால் சிறைப்பட்ட ஆன்மா விடுபட்டு ஆன்ம ஜோதி தோன்றும். மேலும் ஜீவான்மா பரமான்வாகும் (எல்லாம் வல்ல இயற்கை நாமாகவும், நாமே எல்லாம் வல்ல இயற்கையாகவும்). அதுவே வீடுபேறு அல்லது மோட்சமாகும்.

குறிப்பு 3 : சரியை, கிரியை, யோக, ஞானம் அல்லது அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய இரண்டும் ஒன்றேயாகும். இந்த நான்கும் அறியவேண்டுமென்றால் ஆசான் அகத்தீசன் அருள் இருக்க வேண்டும். ஆசான் அருள்பெற காலை, மாலை **ஓம்அகத்தீசாய நம** என்று முடிந்த அளவிற்கு நாமஜெபம் செய்யவேண்டும். நாமஜெபம் செய்ய செய்யத்தான் மேற்கண்ட நான்கு படிகளையும் அறிந்து கடக்கமுடியும். நாமாக கற்றுத்தெளிவது என்பது முடியாததாகும். எனவே, ஆசான் அகத்தீசன் திருவடியை பூஜித்து ஆசிபெறுவோம், வீடுபேறு அடைவோம்.

குறிப்பு 4 : சாகாக்கல்வி என்பது – முற்றுப்பெற்ற முனிவராகிய ஆசான் அகத்தீசரிடம் இனி நான்பிறவாதிருக்க வேண்டும் என்று உருகி தியானிப்பதே சாகாக்கல்வி ஆகும்.

கடவுள் அருள் பெறுவதற்காக ஆடு, கோழி, பன்றி, எருமைகிடா போன்ற உயிர்களை பலியிடுகின்றார்கள். அப்படி பலிகொடுத்தால் இறையருள்பெற முடியாது. பாவம்தான் மிகுதியாக வந்து சேரும். உயிர்பலி கொடுக்க கொடுக்க வறுமையும், பிணியும், பகைமையும், மன உளைச்சலும் ஏற்படும் என்று ஆசான் சிவவாக்கியர் தம் பாடலில் அருளியுள்ளார்கள்.

எடுத்துக்காட்டு

தங்கள் தேகம் நோய்பெறின் தனைப்பிடாரி கோயிலிற்
பொங்கல்வைத்தும் ஆடுகோழிப் பூசைப்பலியை இட்டிட
நங்கச்சொல்லு நலிமிகுந்து நாளுந்தேய்ந்து மூஞ்சுராய்
உங்கள்குலத் தெய்வமும் உங்கள் உருக்குலைப்பது உண்மையே.

ஆசான் சிவவாக்கியர் பாடல் –கவி 535.

நலிதரு சிறிய தெய்வம் என்று ஐயோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றி குக்குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே
புத்திநொந்து உளம் நடுக்கு உற்றேன்
கலியுறு சிறிய தெய்வம் வெங்கோயில்
கண்ட காலத்திலும் பயந்தேன்.

திருஅருட்பா – பிள்ளைப்பெரு விண்ணப்பம் : கவி 59.

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

திருக்குறள் – கொல்லாமை : 327.

கங்கையிலே காவிரியில் நூறுமுறை மூழ்கி
கணக்கற்ற திருக்கோயில் கால்தேய சுற்றி
வெங்கொடிய பலநோன்பு ஏற்றுடலை வருத்தி
வேதங்கள் கூறுகின்ற யாகமெல்லாம் செய்து
பங்கமிலா வேதியர்கை யாகமெல்லாம் செய்து
பசுவதனைப் பூஜித்து அதன்கழிவை உண்டு
தங்களுயிர் மோட்சத்தை அடைவதற்கே முயலும்
தயவில்லார் சத்தியமாய் முக்தியதை யடையார்.

திருஅருட்பா – இறவா நிலை.

மேற்கண்ட பாலின் சாரம் :

தான் செய்த பாவங்கள் நீங்குவதற்காக கங்கை, காவிரி இன்று அநேக புனித தீர்த்தங்களில் நீராடினால்

பாவம் தீரும் என்று நினைப்பவர்கள் உண்டு. பெருமைக்குரிய கோவில்களுக்கு பாதயாத்திரை சென்று வழிபாடு செய்துவந்தால் இறையருள் பெருகும் என்று நினைப்பவர்களும் உண்டு. மேலும் அனேக வேதங்களில் சொல்லப்பட்ட வேள்விகள் செய்து அதன்மூலம் கடவுளின் ஆசி பெறலாம் என்று நினைப்பவர்களும் உண்டு. இன்னும் சிலர் அந்தணர்களாகிய வேதியர்களுக்கு அவர் விரும்புகின்ற அனைத்தும் அள்ளித்தந்து இறையருள் பெறலாம் என்று நினைப்பவர்களும் உண்டு. மேலும் பசுவை பூஜித்தும் அதனுடைய பால்மட்டும் பருகி இறையருள் பெறலாம் என்று நினைப்பவர்களும் உண்டு.

மேலே சொல்லப்பட்ட அத்தனை கருத்துக்களையும் பின்பற்றி நடந்தபோதிலும், பசித்த ஏழைகளுக்கு பசியாற்றி வைக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லாவிட்டால் எந்த வகையிலும் ஆன்மலாபம் பெறமுடியாது என்பது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய ஆசான் இராமலிங்கசுவாமிகளின் உபதேசமாகும்.

## ஆசான் அகத்தீசரை பூஜித்தால் ஏற்படும் நன்மைகள் :

எல்லாம் வல்ல இயற்கை படைப்புகளில் மனிதர்களே தலைசிறந்தவர்களாவார்கள். மனித தேகத்துக்குள் சொர்க்கத்தையும், நரகத்தையும் எல்லாம் வல்ல இயற்கை அன்னை வைத்திருக்கிறாள். நரகமாகிய மலமாயையும், மனமாயையும் அறிந்து ஆசான் அகத்தீசன் ஆசியால்தான் மாற்றமுடியும். மேலும் நம்முள் சொர்க்கமாகிய ஜோதியை காணலாம். மேலும் தாமே சிவமென்று அறிகின்ற அறிவு உண்டாகும். இதை முற்றும் உணர்ந்தவர் ஆசான் அகத்தீசன் ஆவார்.

உலகத்திலுள்ள கோடானுகோடி ஞானிகள் ஆசான் அகத்தீசர் திருவடியை பூஜித்து மலமாயையும், மனமாயையும், பந்தபாசங்களையும் நீக்கி பேரருள் பெற்றிருக்கிறாள். இதுமட்டுமல்லாது எல்லாம்வல்ல

பரஞ்ஜோதியை தம்முள் கண்டு பரப்பிரம்மம் ஆகியிருக்கிறார்கள். இதற்கு ஆசான் அகத்தீசன் ஆசியோடு நல்வினை, தீவினையை உணர்ந்து தீவினையை நீக்கியும், நல்வினையை பெருக்கியும் ஆசான் அகத்தீசனின் ஆசி பெற்றிருக்கிறார்கள். அவர்கள்தான் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலையும் செய்யும் வல்லமை பெற்றிருக்கிறார்கள். எனவே ஆசான் அகத்தீசரை பூஜித்து மரணமில்லா பெருவாழ்வு பெறுவோமாக.

எ.கா.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

**திருக்குறள் – துறவு அதிகாரம், குறள் –350.**

உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினி லுத்தமனைக் காண்.

**ஔவைக்குறள் – அதிகாரம் 2 – உடம்பின்பயன்.**

மாசற்ற கொள்கை மனத்தி லடைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு.

**ஔவைக்குறள் – அதிகாரம் 2 – உடம்பின் பயன்.**

**குறிப்பு :** ஆன்ம லாபம் பெற விரும்புகிறவர்கள் ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஜீவகாருண்யத்தைக் கடைபிடிக்க வேண்டுமானால், ஜீவகாருண்ய கடவுள்களான இராமலிங்கசுவாமிகள், மாணிக்கவாசகர், தாயுமான சுவாமிகள், திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர், அகத்தீசர், திருமூலதேவர், கருவூர் முனிவர், பட்டினத்தார், போகமகாரிஷி, கோரக்கர், நந்தீசர், காளாங்கிநாதர், சட்டைமுனிநாதர், சண்டிகேசர், சிவவாக்கியர், திருவள்ளுவர் போன்ற மகான்களின் நாமத்தை தினசரி நாமஜெபம் செய்வதே பூஜையாகும். அதுவே தவமும் ஆகும். நாமஜெபம் செய்தால் வன்மனம் நீங்கும், லோபித்தனம் நீங்கும், வறுமை தீரும், மனித நேயம் அல்லது

மனிதாபினமானம் உண்டாகும். எனவே, பெரியோர்கள் ஆசி இல்லாமல் ஆன்மலாபம் பெற முடியாது. ஜீவகாருண்யத்தையும் கடைப்பிடிக்க முடியாது. ஆகவே, ஞானிகளைப் பூஜித்து எல்லா நன்மைகளையும் அடைவோமாக.

**ஓம் அகத்தீசர் துணை**

**இந்த நூல் தெய்வீகமானது, பாதுகாத்துக்கொள்வதும் நல்லது.**

**16 – 09 – 2001, ஞாயிற்றுக்கிழமை** அன்று
பாண்டிச்சேரி நாடிஜோதிடர் துரைகணேசன் அவர்கள்
வாயிலாக **பிரம்ம முனிவர், தம் சுவடி மூலம்**
**பரமானந்த சதாசிவ சத்குரு**
தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**
அவர்களுக்கு **கலிகால மாற்றங்கள்** பற்றி
அருளிள்ளார்கள்.

## பிரம்ம முனி ஆசி காண்டம்

ஆழிசூழ் உலகதனை காத்து நின்று
ஆடினாய் தில்லை தனில் தேவியோடு
வாழ்விற்கும் தாழ்விற்கும் நடுவே நின்று
வளவாழ்வு அளித்திடுமோர் தேவதேவா 01.

தேவாதி தேவர் தொழும் கையிலைவாசா
தருமத்தை காத்திடவே நீதி நெறியும்
புவிதனிலே சித்தர்களில் ரிஷிகள் எல்லாம்
படைத்திட்ட பரம்பொருளே திருவடி வணங்கி 02.

வணங்கியே பூலோகத்தை காத்திடவே
வண்ணமுற தேவர்களும் ரிஷிகள் சித்தர்
வேண்டியே பரமனிடம் சப்த ரிஷிகள்
வண்ணமுற நாரதரும் தேவிமூவர் 03.

மூவருடன் பஞ்சபூதம் கணங்களெல்லாம்
மகேஸ்வரனை பூஜித்து உலகம் காக்க
தவமிருந்த தருணத்தில் பரமன் மகிழ்ந்து
தவரிஷிகள் குறைகேட்டார் கையிலாயத்தில் 04.

கையிலாயத்தில் உமையவளின் அருளாசியோடு
கடுந்தவம் முனிவர்களும் பரமனிடத்தில்
கையிலாய வாசனே பரம்பொருள் வாழ்க
கூவியே பூலோகத்தை காக்க வேண்டி 05.

காத்திடவே முறையிட்டு வேண்டல் செய்தார்
செகன்னாதா பரம்பொருளே கலியுகமும்
சத்தியநீதி மறைந்துமே தருமம் இழுந்து
சர்வலோக மக்களும் பாவியாகி 06.

பாவிகள் நிறைந்திட்ட பூலோகத்தில்
புண்ணியங்கள் இல்லாது பலதேசம் தண்ணில்
தவறாக தேசத்தின் வஞ்சகத்தோர்
தூதுபோய் களவுபேசி வன்முறைபேசி 07.

பேசியே சாதிமதம் பித்தர்கூட்டம்
பாமரரை புண்ணியரை வதைக்க கண்டோம்
பூலோகத்தில் பலதேசம் மக்கள்எல்லாம்
பயங்கொண்டு வாழ்ந்திடவே நேர்த்ததிப்போ 08.

இப்பவும் பூலோகத்தை காக்கவேண்டி
ஈசனே கயிலாயம் ஓடிவந்தோம்
தப்பான பாவிகளின் வஞ்சனையால்
தேசத்தில் போர்களும் அதர்ம சிந்தை 09.

சிந்தைகொண்ட கயவர்கூட்டம் தேசமழிக்க
சதிசெய்ய பரமனே கண்டு நாங்கள்
இந்தநாள் ஓடிவந்தோம் உலகம் காக்க

ஈசனிடம் நாரதன்யான் ரிஷிகள் கூடி 10.

கூடியே தவமிருக்கும் காலம்தன்னில்
கயிலாய வாசனும் அருள்பாலித்து
தேடிவந்த ரிஷிகளே வாழ்க வாழ்க
தேசத்தை காத்திடவே அருள்பாலித்தேன் 11.

காத்திடவே பிர்மலோகம் சென்றுநீங்கள்
கருணையுடன் பிர்மனின் உபதேசம் பெறுவீர்
நீதியோடு உங்களுக்கு பலனும் கிட்டும்
நீலகண்டன் அருள்பெற்று ரிஷிகள் எல்லாம் 12.

எல்லோரும் பிர்மலோகம் சென்றடைந்தோம்
இறைவன் பிர்மனையே வணங்கி நின்றோம்
நல்லதோர் திருவருள் தந்து பிர்மன்
நாடிவந்த காரணத்தை கேட்டாரன்று 13.

அன்றுமே நாரதன்யான் ரிஷிகள் கூடி
அகிலத்தை படைத்திட்ட பிர்மதேவா
எண்ணிலாகோடி உயிர்படைத்த பிர்மனே போற்றி
எழில்மிகு மானிடபிறவி படைத்த இறைவா 14.

இறைவனே பூலோகத்தில் மாந்தர்கூட்டம்
இன்னலுற்று கலியுகத்தில் வறுமைசூழ்ந்து
நிறைவுயிலா சிந்தையினால் பாவிகளாகி
நீ நான் என்ற பேதம் சூழ்ந்து 15.

சூழ்ந்துமே இறைவுணர்வு இல்லாவண்ணம்
சர்வதேச மக்களும் மனம் வருந்தி
தாழ்வாக பாவிகளின் வஞ்சனையால்
தேசமும் மக்களும் பரிதவிக்க 16.

தவித்திடவே பாவிகளின் வஞ்சனைபுத்தி
தேசத்தை சீர்குலைக்க கண்ட நாங்கள்
தவரிஷிகள் யீசனிடம் கட்டளையிட்டோம்
திருநீலகண்டரும் பிர்மலோகம் செல்வீர் 17.

சென்றுநீங்கள் பிர்மனிடம் உபதேசம் பெறுவீர்
சிவனிட்ட கட்டளையால் பிர்மலோகம் வந்தோம்
என்றுமே நாரதன்யான் ரிஷிகள் கூடி
இறைவன் பிர்மனிடம் உலகம் காக்க 18.

காக்கவே அருள்வேண்டி நின்றோம் நாங்கள்
கருணையோடு பிர்மதேவன் உபதேசித்தார்
இக்காலம் பூலோகத்தை காக்க வேண்டி
இத்தடம் வந்திட்ட ரிஷிகளை கேட்பீர் 19.

கேட்கவேண்டும் அகத்தியரும் சப்தரிஷிகள்
கலியுகமும் அய்ந்தாயிரம் நூற்றிரண்டில்
எடுத்துரைக்க தமிழாண்டு விஷுஎனும் காலம்
இறைவன்மகிழ சிங்கதிங்கள் கடைநாளன்று 20.

அன்றுமே சதுர்தசி பூரநாளில்
ஆதவன் இந்து கூடும்நாள் ஆதிவாரம்
என்றுமே பூலோகத்தை காத்திடவே
ஏற்றியநூல் இதுவாகும் பாரதத்தில் 21.

பாரதத்தில் உலகம் காக்க மாலவனும்
பத்தவதாரம் கண்டுமே நிலைகள்மாறி
பாரதத்தில் வேதங்களும் காவியங்கள்
புகழ்ந்துரைக்க மானுடர்கள் அறியவேண்டி 22.

வேண்டியே சித்தர்களை ரிஷிகளை படைத்தோம்
வேதங்கள் சாத்திரங்கள் உலகோர் வாழ
வண்ணமாய் வாகடங்கள் சோதிடங்கள்

விஞ்ஞானம் மெய்ஞானம் இறைவுணர்வு 23.

உணர்வோடு உண்மைகளும் இலக்கணங்கள்
உயர்வாக படைத்துவந்தோம் மும்மூர்த்தி நாங்கள்
மனமகிழ்ந்து தேவியர்கள் காத்துநிற்க
மானிடர்கள் வாழ்வதற்கு எண்ணும் எழுத்தும் 24.

எழுத்துடன் நல்மொழிகள் இருவினை காட்டி
எல்லோரும் அறிந்திடவே மெய்ஞானம் தந்து
அழகுடன் தேசத்தை படைத்தோம் நாங்கள்
அவதரித்த மானிடர்கள் அறியா வண்ணம் 25.

அறியாது மெய்ஞானம் அறிந்தார்போல
அகபட்டு மாயையில் கலிகுற்றத்தால்
குற்றமென்ற பாவிகளாய் மாறியின்று
குவயத்தில் ஆவமும் அகங்கார சிந்தை 26.

சிந்தயினால் எல்லோரும் மெய்ஞானமறந்து
சிறைஎன்ற மாயையில் வீழ்ந்தாரின்று
இந்தநாள் பொய்களவு புறம்பு பேசி
இறைவனின் நாமம்கூறி பாவம் செய்யும் 27.

பாவிகளும் நானேகடவுளென்று வேடம்பூண்டு
பொருளின்பம் பெண்ணின்பம் பூமியின்பம்
தவறாக இறைவன்மீது சத்தியம் செய்து
தேசத்தை சீர்குலைக்கும் பாவிகள் உலகில் 28.

உலகிலே சிற்றின்பம் பெரிதுஎன்று
உண்மையிலா மதுமங்கை இச்சைவேண்டி
நல்லதொரு உறவுபேசி வஞ்சனை செய்து
நல்லோரை ஏமாற்றும் காலமிதுவே 29.

காலமதில் யின்றவர்க்கு சேய்கள் வஞ்சம்
கலியுகத்தில் சேய்களுக்கு யீன்றோர் வஞ்சம்
இல்லாட்க்கு காந்தன்வஞ்சம் உறவறியாது
இல்லவளும் காந்தனுறவு மகிமையறியா 30.

அறியாது காந்தனுக்கு அவள்செய்யும் பாவம்
அன்போடு கூடி பிறந்தவர்க்கு
குற்றமாய் துணையோர்கள் செய்யும் பாவம்
குவலயத்தை சீர்குலைக்க மாந்தர் கூட்டம் 31.

கூட்டமும் பூமிகளை பங்குகொண்டு
கொலைகளவு செய்துமே ஆத்திசேர்த்தல் (செல்வம்)
எடுத்துரைக்க பயிர்பசிலி அழித்துநின்று
இறையாலத்தில் களவு செய்தல் 32.

களவுடன் மனம்வருந்த கொலையும் செய்தல்
கணக்குமாற்றி இறையாத்தி அபகரித்தல்
(அரசு சொத்ததை ஏமாற்றுதல்)
ஏழைகளை வஞ்சனைசெய்து வரிசுமத்தி
இறைபக்தி இல்லாது அரசாட்சிசெய்து 33.

செய்துமே பூலோகத்தை சீர்குலைத்தும்
சிறப்புடைய நதிகளை யீனம்செய்து
அய்யமதாய் யீனமாக்கி நதியைவிற்கும்
அவசர கலியுகத்தில் சிற்றின்பம் ஓங்கி 34.

ஓங்கியே பேரின்பம் அறியாமாந்தர்
உலகியல் அறிந்துமே பாவிகளும்
பங்கமதாய் நல்லோர்சொல் கேட்காவண்ணம்
புறம்புபேசி வாழ்கின்ற பாவிகளும் 35.

பாவிகளும் பாவம்செய்ய புண்ணியம்குறைய
பூலோகத்தில் எவ்வாறு நிகழும் நன்மை
தவறான மாந்தர்கூட்ட அகந்தையாலே

தற்பெருமை கொண்டுமே இறைபூசைதடுக்க 36.

தடுக்கவே பெரியோர்சிறியோர் பேதம் சூழ்ந்து
திருவிழா இல்லாது கர்மம் சூழ
எடுத்தாலும் தவரிஷிகள் தவத்தை கலைக்க
ஏளனம்பேசும் மாந்தர்கூட்டம் பெருகி நிற்க 37.

நிற்பதுவால் எவ்வாறு நன்மை நிகழும்
நல்லதொரு பிர்மதேவன் ரிஷிகளை நோக்கி
குற்றமிலா அக்காலம் கேட்கும்போது
குவலயத்தை படைத்திட்ட பிர்மதேவா 38.

தேவனே காக்கவேணும் பூலோகத்தை
தவரிஷிகள் பிர்மனிடம் முறையிட்டு வேண்டல்
குவலயத்தை காத்திடவே வழியும் கூறும்
கூவியே சித்தர்கள் பிர்மனை போற்ற 39.

போற்றிடவே பிர்மதேவன் உபதேசித்தார்
பூலோகத்தை காத்திடவே கலியுகத்தில்
இறைபூசை பலசெய்து பேரின்பம் கண்ட
இறைபிறப்பு பலகண்டு தவமும் செய்த 40.

தவம்செய்து சித்தர்களை முறைவணங்கும்
தவசித்தன் தமிழகத்தில் திரிபுரஎல்லையில் (திருச்சி)
பாவங்கள் இல்லாது கலியுகத்தில்
**பாரதத்தில் சூரியகுலத்தில் அரிசந்திரனாக** 41.

அரிசந்திரனாய் அவதரித்து சத்தியம் காத்து
அகிலத்தில் நீதிதந்த பரமஞானி
சிறப்புடனே உலகமக்கள் இறைவணக்கம் செய்ய
**சோழ மன்னனாய் தேவாலயங்கள்** 42.

ஆலயங்கள் அமைத்துமே இறைசின்னம் காட்டி
அரசுசெய்து அறம்வளர்த்து மன்னன் வாழ்க
உலகிலே இறைவன் ஓர்வனென்று
ஒளிகாட்டி உலகவர்க்கு உபதேசிக்க 43.

உலகிலே தில்லைஎனும் நகரம் தன்னில்
**இராம லிங்கமாக அவதரித்து**
பலநூல்கள் ஏற்றியே புகழாய்பாடி
பாவிகளும் பாவங்களும் அதிகரித்த 44.

**பூலோகத்தை காத்திடவே புண்ணிய ஆத்மாவை**
**படைத்திருக்கேன் திரிபுர எல்லைதன்னில்** (திருச்சிராப்பள்ளி)
**பூலோகம் காத்திடவே கட்டளையிட்டேன்**
**பிறந்துவிட்டான் அரங்கராசன் நாமஉருவில்** 45.

உருவிலே எண்ணிலாகோடி சித்தரிஷிகள்
உட்கொண்ட தவரிஷியும் ஓங்காரமடக்கி
கருமுதலாய் தவம்கொண்டு அண்டம்பிண்டம்
காத்தருளும் மும்மூர்த்தி அரங்கனாகும் 46.

அரங்கனவன் சர்வதெய்வம் சர்வசிக்தி
அரங்கனவன் சர்வரிஷி சர்வசித்தன்
அரங்கனவன் சர்வமுனிவன் சர்வஞானி
அரங்கனவன் சர்வஜீவன் சர்வயினமும் 47.

இனம்மதம் இல்லாது தீபஜோதி
என்றுமே திகழ்ஒளியாய் சர்வலோகத்திலும்
மனம்வீசும் மகானவன் அரங்கராசன்
முனிவர்களே ரிஷிகளே தேவர்களே 48.

தேவர்களே பூலோகத்தை காக்கவேண்டி
தவரிஷிகளை படைத்தேன்யான் கலியுகத்தில்
பாவமென்ற கலிகுற்றத்தில் மாயையில் மயங்க
பலமுனிவர் சக்தியிழந்து பாவியானார் 49.

பாவியாய் மானுடர்கள் வாழும்உலகில்
புண்ணியத்தின் நிலையுணர்ந்து இருவினையறிந்து
தவத்திலே கலிவென்ற கலியுகசித்தன் (மாயையை வென்ற)
தவயோகி அரங்கனே அறிவீர் நீங்கள் 50.

நீங்களெல்லாம் அரங்கனவன் உருவில்நின்று
நல்லதொரு பூலோகத்தை காத்திடவே
மங்களமாய் அரங்கர்மகிமை உலகோர்அறிய
முனிவர்களே மானிடர்க்கு எடுத்துசொல்லும் 51.

மானிடர்கள் மகாஞானி அரங்கன்தன்னை
மணம்வேண்டி வணங்கிவந்தால் நற்கதி அடைவர்
காணவே பூலோகத்தில் புண்ணியராவர்
கொடுமைசெய்யும் பாவிகளும் இனதுரோகிகள் 52.

கள்ளமதாய் பகைசெய்யும் தேசமெல்லாம்
கருத்துள்ள வேதத்தை புறம்பு பேசும்
கள்ளமென்ற தீயர்கூட்டம் தேசமெல்லாம்
கலியுகத்தில் அழிந்துவிடும் பாவபூமி 53.

அழிந்தபின் பாரதமே நிலைக்குமப்பா
அகிலத்தோர் பாரதத்தின் மக்களாவார்
அழகுபட பாரதமக்கள் உலகெங்கிலும்
அரங்கர்குலம் அங்கெங்கும் செழித்து வாழும் 54.

செழித்துவரும் நாட்டிற்கு பாவம் தீர
**சிவனடியான் அரங்கமுனியை வணங்கவேணும்**
அழகுடைய திருவுருவம் உலகுளங்கும்
அடையாளம் காட்டியருள வேண்டும் வேண்டும் 55.

**வேண்டியதோர் அவனுருவம் தரிசிப்போர்கள்**
**வினையகன்று சாபமகன்று புண்ணியராவார்**
**கண்டுரைக்க அரங்கநாமம் செபித்துவிட்டால்**

**கலியுகத்தில் புண்ணியராவார் அருளை தந்தேன்** 56.

அருள்தந்த பிர்மதேவா போற்றி போற்றி
அகிலத்தில் மானுடர்கள் பசியால் வாடி
திருநதிகள் தண்ணீரில்லா வறட்சியோடு
தேசமக்கள் மனம்வருந்தி வாழும்நிலையில் 57.

நிலைமாற அருளவேணும் பிர்மதேவா
நாரதரே முனிவர்களே ரிஷிகளேகேள்
கலையாத அமிர்தவுடல் கண்ட ஞானி
**கலியுகத்தை காக்கவந்த அரங்கராசன்** 58.

அரங்கனையே மானிடர்கள் துதித்து வணங்கி
அவனிடம் முறையிட்டால் நதிதேவிகள்
அரங்கர்சொல் கேட்டுமே நதிநிரம்பும்
அதுவழியே நிரம்பிவரும் நீர்நிலைகள் 59.

நிலைமாறி செழித்துவரும் பூலோகமெங்கும்
நவநதியின் கங்கைதனை கொண்டு வந்து
கலசத்தில் நிரம்ப செய்து அரங்கர் கரத்தில்
கொடுத்து மக்கள் வணங்கிடவே நதிமகிழ்ந்து 60.

மகிழ்ந்துமே நீர்வளங்கள் செழிப்புண்டாகும்
முனிவர்களே அரங்கனையே பூசை செய்வீர்
செகம்செழிக்க அருள்தந்ந பிர்மதேவனே
சிறப்புடைய உலகமக்கள் புண்ணியராக 61.

புண்ணியராய் பாரதமக்கள் வாழ்வதற்கு
போர்களும் தேசசண்டை இல்லாவண்ணம்
வண்ணமாய் உலகத்தை காத்திடவே
வழிகூறும் பிர்மதேவா போற்றி போற்றி 62.

போற்றியே வேண்டுகின்ற ரிஷிமுனியே கேள்
பரமசிவன் திருவுருவாய் அரங்கன் காப்பான்
குற்றமிலா அரங்கன்தவத்தால் அமைதி கிட்டும்
கொடுத்திடுவான் அரங்கனவன் சாந்தி தீட்சை 63.

சாந்திபெற உலகமெங்கும் வெண்மைதூசு (வெண்துகில்)
சத்குருவின் கரத்தாலே தீட்சைபெற்றால்
மாந்தனொருவன் பெற்றாலே லக்கமக்கள்(இலட்சம் மக்கள்)
மண்ணுலகில் புண்ணியராவார் படைத்துவிட்டோம் 64.

படைத்துவிட்டோம் பாரதபூமி சற்குருவை
பூலோகத்தை அவன்காப்பான் அருளுமாகி
இடைவிடா ரிஷிகளெலாம் அரங்கனுக்கு
உதவிசெய்து உலகத்தை காக்கவேண்டும் 65.

வேண்டியவார் பலனுரைத்த பிர்மாபோற்றி
விளம்புகிறேன் நாரதன்யான் அரங்காவுனக்கு
மண்டலத்தில் பூலோகத்தில் கொலைகளவும்
முறைதவறி தேசத்தை சீர்குலைக்கும் 66.

சீர்குலைக்கும் வஞ்சனைகாரர் இனவெறியோர்
சிறப்புடைய பாரதத்தை அழிக்கவேண்டி
குற்றமாய் பலபேரும் இருந்தபோது
குறைதவிர்த்த தவமிருந்து வென்றாயப்பா 67.

அப்பனே நாடுசெழிக்க நதிநிரம்ப
அகிலத்தில் புண்ணியம்நிரம்ப தவத்தை கொள்வாய்
தப்பாக காடுகளும் நதிகள் வறண்டு
தவித்திடும் மாந்தர்களை காத்திடப்பா 68.

அப்பனே சர்வகுரு போற்றி வாழ்க
அரங்கர்குரல் கேட்கவந்த மாந்தர்கட்க்கும்
தப்பில்லா தவயோகி ஸ்ரீராம கருணாகரனும்

தவயோகி அரங்கன்முனி பலனைவேண்டி 69.

வேண்டியே வந்ததோர் சர்வமக்களுக்கும்
வாழ்த்தியே நாரதன்யான் அருள்பாலித்தேன்
கண்டுரைக்க பூலோக மக்கள் நீங்கள்
கலிகடவுள் அரங்கன்முனியை வணங்கவேணும் 70.

வணங்கிவிட்டால் நாட்டுவினை தீருமப்பா
வளம்செழிக்கும் பஞ்சபூதம் மனம்குளிரும்
எண்ணிய நாட்களெல்லாம் மழை பொழியும்
எல்லாமும் சர்வகுரு அரங்கனாகும் 71.

அரங்கனிடம் முறையிட்டால் பூலோகத்தில்
அனைத்துவினை அகன்றுமே அருள்பெறுவீர்
அரங்கனே உலகஒளி கதிர்மதியாவான்
அவனின்றி உலகிலே கூறிடவும் 72.

கூறிடவும் நிறைந்தகுரு இல்லையப்பா
குவலயத்தை காக்கவந்த பரமஞானி
பற்றுடனே வணங்கவேணும் பக்தர்நீங்கள்
பூலோகத்தில் அவன்புகழ் பாடிநிற்பீர் 73.

அவன்புகழ் பாடுகின்ற எல்லை எல்லாம்
அருள்ஓங்கும் பொருள்நிறைந்து புண்ணியராவர்
தவமுனிவன் நாமத்தை தினமும் ஓத
தரித்திரங்கள் இல்லாது செம்மையாவார் 74.

செம்மையாக வாழ்ந்திடவே பூலோக மக்கள்
சத்குருவை வணங்கவேணும் திருவடி பூசை
செம்மையாக புண்ணியங்கள் போற்றுவாரவனை
சேயில்லா (குழந்தை) மணம்கூடா வருந்தும் மாந்தர் 75.

வருத்தமுடன் ஜீவனமிலா (தொழில்) வாழ்வில் துன்பம்
வஞ்சனையும் வழக்குதுன்பம் நோய்கள் சூழ்ந்து
கருமத்தால் அவதியுறும் பூலோக மக்கள்
கருமவினை அகன்றுமே வரம் பெறுவார் 76.

வரம்பெற்றால் அரங்கனிடம் ஞானியாவார்
வளமோடு செல்வமதும் செழித்து வாழ்வார்
சிறப்புடைய பலதேசத்தில் மாந்தரெல்லாம்ள
சத்குரு உருவத்தை கண்டால் போதும் 77.

கண்டவர்கள் ஞானியாவார் புண்ணியராவார்
குருவுருவம் பலநாட்டில் பூசை செய்தால்
அண்டிவரும் தீமைகளும் விலகியோடும்
அந்தந்த நாடுகளும் செழித்து ஓங்கும் 78.

அரங்கர் முறை சொல்விட்ட சித்தர் பூசை
அறிந்துமே வாழ்வோர்கள் சிறப்படைவார்
அரங்கர் வாழ்க திருநாமம் செபத்தினாலே
அகிலமக்கள் வாழுமப்பா பூலோகத்தில் 79.

பூலோகத்தில் அரங்கர்புகழ் சரித்திரத்தை
பக்தியோடு எடுத்துரைக்க யிதுநூலாசான்
நல்லதொரு அரங்கராசன் பலனுரைத்து
நாள்யிதுமுதல் நாடிபலன் நிறைவுசெய்து 80.

நிறைவுடன் ஞானியின் அருளைபெற்று
நல்லதொரு குருபுகழ் பாடிட வேண்டும்
நிறைவுதந்தோம் சப்தரிஷிகள் முனிவர் நாங்கள்
நூலாசான் இனி எவர்க்கும் பலனுரைக்க 81.

உரைப்பதற்கு விதியில்லை தந்தோமாசி
உலகாசான் அரங்கனுக்கு உரைத்ததாலே
நிறைந்த புண்ணியத்தை பெற்றுவிட்டான்

நூலாசான் யிதுநூலை விதியறிந்து 82.

அறிந்துமே பொய்கைநல்லூர் சித்தர் பீடத்தில்
அர்ப்பணித்து அருள்பெற்று வாழ்க வாழ்க
அரங்கமுனி கேட்கவேணும் நூலவனை வாழ்த்து
அவன்வாழ பூலோகத்தில் அருளாசி தந்து 83.

தந்துமே நிறைந்த பொருள் தனமும் கூட்டி
தவறாது உபதேசம் அளிக்க வேண்டி
எந்தநாளும் அரங்காவுன் திருநாமம்கூற
எங்கெங்கும் உன்புகழ் அவனும்பாட 84.

பாடிடவே அருளாசி அளிக்க வேண்டும்
பக்தர்களே இப்பலனை கேட்பதாலே
கோடிமக்கள் புண்ணியராவார் அரங்கர் அருளால்
கோடிகாலம் பக்தர்வாழ்க அரங்கர் வாழ்க 85.

வாழ்கவே அரங்கர்குலம் அறிந்தமக்கள்
வாழ்கவே அரங்கர்வாழும் பாரதபூமி
வாழ்கவே அரங்கர்செய்யும் புண்ணிய சேவை
வாழ்கவே அரங்கர்நாமம் ஆசிமுற்றே 86.

**.....சுபம்.....**

**மகான் பிரம்ம முனிவர் தம் சுவடி மூலம் துறையூர் ஓங்காரக்குடிலாசான், தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் அவர்களுக்கு அருளிய அருட்கவிகளின் சாரம்.**

கலிகாலமாகிய இக்காலத்தில் மது, காமம், பொய், கொலை, களவு மற்றும் பசுவதை செய்தல் போன்ற குற்றங்கள் மிகுந்து இருப்பதால் பண்புள்ள மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள்.

இதையெல்லாம் உணர்ந்த சித்தர்கள், முனிவர்கள், தேவர்கள் மனம்வருந்தி எல்லாம்வல்ல பரமேஸ்வரனிடம்

சென்று முறையிட்டார்கள். பரமேஸ்வரனும் உலகத்தைக் காத்திட பிரம்ம தேவனிடம் சென்று முறையிடும்படி கட்டளையிட்டான்.

அதன்படி சித்தர்களும், முனிவர்களும், தேவர்களும் பிரம்மதேவனிடம் சென்று கலிகால கொடுமைகளைப்பற்றி முறையிட்டார்கள். பிரம்மதேவனும் மனமகிழ்ந்து கலிகால கொடுமைகள் நீங்குவதற்காக திருச்சிராப்பள்ளி எல்லையில் உள்ள, துறையூர் ஓங்காரக்குடிலில் ஒரு மகான் அவதரித்திருக்கிறார். அவரால் கலிகாலக் கொடுமைகள் நீங்கவும், பண்புள்ள மக்கள் தடையில்லாமல் வாழவும் நானும், திருமாலும், ஈசனும் அவருக்கு அருள் செய்து இருக்கிறோம். அவரால்தான் உலகத்தில் தீமைகள் நீங்கி நன்மைகள் உண்டாகும். எனவே நீங்கள் எல்லாம் ஓங்காரக்குடிலைச் சார்ந்திருந்து உலக மக்களை இரட்சிக்கவேண்டும் என்று பிரம்மதேவர் சித்தர்களுக்கும், முனிவர்களும், தேவர்களுக்கும் கட்டளையிட்டுள்ளார்.

ஆகவே, துறையூர் ஓங்காரக்குடிலில் சித்தர்களும், முனிவர்களும், தேவர்களும் தங்கியிருந்து, உலக மக்களுக்கு ஆசி வழங்குகிறார்கள். மகான் பிரம்ம முனிவர் அருளிய சுவடியில் உள்ள கவிகளின் சாரம் சுருக்கமாகத் தந்துள்ளோம். இதை அன்பர்கள் படித்து பயனடைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,**

**ஓங்காரக்குடில்,**

துறையூர், திருச்சி மாவட்டம்.